**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.**
**C.C. No.160/2021 P.W .1**

| | |
|---|---|
| Name: சதீஸ்குமார் | Father's Name : பாலு |
| Village: | Taluk : |
| Age : | Occupation : |
| Caste : | Religion : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.01.2023

---

**04.01.2023:** முதல் விசாரணை:

நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை நிருபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது எனது கையொப்பம் தான். கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

கடந்த 28.11.2020 தேதி **கேட்பு கடனுறுதிச்சீட்டின் நகல் ம.சா.ஆ.1** ஆகும். கடந்த 31.08.2021 ம் தேதியிட்ட IndusInd வங்கி, மதுரை கிளை **காசோலை** (காசோலை எண்.546735)அசல் **ம.சா.ஆ.2** ஆகும். கடந்த 03.09.2021 தேதியன்று ம.சா.ஆ 2 காசோலை Stop payment done by Drawer என்ற காரணத்திற்காக **திருப்பப்பட்ட குறிப்புச்சீட்டின் அசல் ம.சா.ஆ.3.** ஆகும் கடந்த 18.10.2021 தேதியன்று ம.சா.ஆ 2 காசோலை Check stoped by drawer என்ற காரணத்திற்காக **திருப்பப்பட்ட குறிப்புச்சீட்டின் அசல் ம.சா.ஆ.4.** ஆகும். கடந்த 02.11.2021 இது சம்பந்தமாக எதிரிக்கு அனுப்பிய **வழக்கறிஞர் அறிவிப்பு (அஞ்சலக ரசீதுடன் )** அலுவலக நகல் **ம.சா.ஆ.5** ஆகும். மேற்படி ம.சா.ஆ.5 அறிவிப்பை 09.11.2021 அன்று எதிரி பெற்றுக்கொள்ளாமல் **திருப்பப்பட்ட அஞ்சலக உறை அசல் ம.சா.ஆ.6** ஆகும். மேற்படி ம.சா.ஆ.5 அறிவிப்பை 10.11.2021 அன்று எதிரி பெற்றுக்கொள்ளாமல் **திருப்பப்பட்ட அஞ்சலக உறை அசல் ம.சா.ஆ.7** மனுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுகிறேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்.செல்வி.செ.ஜெயப்பிரதா.B.Sc.,B.L.,(Hon's)
விரைவுநீதிபதி, காரைக்குடி.